]1979 பிப்ரவரி 13

பட்டதாரி ஆசிரியர்கள்.

*வினா எண். 27—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் 10 (A) 1 விதியின்கீழ் பணியில் அமர்த்தப்பட்டுள்ள பட்டதாரி ஆசிரியர்கள் எத்தனை பேர்?

(ஆ) ஐந்து லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு எனற திட்டத்தின்கீழ் பணியில் சேர்க்கப்பட்டுள்ள பட்டதாரி ஆசிரியர்கள் எத்தனை பேர்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) 576.

(ஆ) 900.

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, தமிழ்நாட்டில் 10 (எ) (1) விதியின கீழ் பணியில் அமர்த்தப்பட்டவர்கள் 576 பேர்கள் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதைப் போல 5 லட்சம் பேர்களுக்கு வேலை வழங்கும் திட்டத்தின் கீழ் 900 பேர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது என்றும் கூறியிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் இந்த 576 பேர்கள் தவிர மீதம் எத்தனை பேர் வேலை இல்லாமல் இருக்கிறார்கள்? 5 லட்சம் பேர்களுக்கு வேலைவாய்ப்பளிக்கும் திட்டத்தின்கீழ் அனைவருக்கும் எப்போது வேலை கொடுக்கப்படும் என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, இந்த கேள்வியே வேறு. அதற்கு நான்தான் அமைச்சர் என்றாலும் தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. அ. சுவாமிதாஸ் : தலைவரவர்களே, இந்த பட்டதாரி ஆசிரியர்கள் தற்காலிகமாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களை நிரந்தரமாக பணியில் அமர்த்த தொடர் நடவடிக்கை எடுக்கப்படுமா ? பப்ளிக் சர்வீஸ் கமிஷன் நடத்தும் தேர்வில் அவர்கள் கலந்துகொள்ளலாம் என்று இருக்கிறது. அதில் பணியில் இருக்கும் ஆசிரியர்களை கட்டாயமாக பணியில் நியமிக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அவர்களை பணியில் அமர்த்த வேண்டுமென்ற முறையில்தான் அரசுத் துறையில் பணியில் இருக்கும் பட்டதாரி ஆசிரியர்களுக்கென்று தனியாகத் தேர்வாணைக் குழு மூலம் தேர்வு நடத்த அரசு ஏற்பாடு செய்துள்ளது.

1979 பிப்ரவரி 13]

திரு. எஸ். ஜே. இராமசாமி : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் கூறிய பதிலில் 576, 900 என்று குறிப்பிட்டார்கள். இப்போது பட்டதாரி ஆசிரியர்கள் பள்ளிகளில் தற்காலிகமாக நியமிக்கப்படுகிறார்கள். அவர்கள் சீனியாரிட்டி அடிப்படையில் வருட வாரியாக அதாவது 1970-ல் பதிவு செய்தவர்களுக்கு முதலிலும் 1971-ல் பதிவு செய்தவர்களுக்கு அதற்குப் பிறகும் என்ற முறையில் எடுக்கப்படுகிறார்களா ? அல்லது இடையில் இருந்து எடுக்கப்படுகிறார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அரசாங்கம் அரசுப் பள்ளிகளில் ஆசிரியர்களை நியமிப்பதற்கு தேர்வாணைக் கழகம் மூலம்தான் எடுக்க வேண்டுமென்பது இப்போது இருக்கிற நடைமுறை.

திரு. கோ. இளங்கோவன் : தலைவரவர்களே, 10 (எ) (1) விதியின்கீழ் நியமனம் செய்யப்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள் எத்தனை ஆண்டுக்காலம் தற்காலிகமாக இருக்கிறார்கள் ? இந்த அவல நிலையைப் போக்க அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, 11—9—1973 முதல் 5 இலட்சம் பேர்களுக்கு வேலை அளிக்கும் திட்டத்தின் கீழ் பல்வேறு நிறுவனங்களில் வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, தமிழ்நாடு முழுவதும் 10 (எ) (1) முறையின்படி நியமிக்கப்பட்டு, அவர்களை திரும்பவும் நீக்கம் செய்து, இப்போது வேலை இல்லாமல் பல ஆசிரியர்கள் இருக்கிறார்கள். அவர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்ள ஜி. ஓ. 2683, தேதி 30—12—1977 வகை செய்கிறது என்று கருதுகிறேன். அந்த அடிப்படையில் அவர்களுக்குத் தனியாக பப்ளிக் சர்வீஸ் கமிஷன் டெஸ்ட் நடத்தி, அவர்களை நிரந்தரமாக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ? அந்த டெஸ்ட் எப்போது நடத்தப்படும் ? எப்போது வேலை கொடுக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே 31—3—1977 அன்று ஓராண்டு தற்காலிகமாகத் தொடர்ந்து அல்லது விட்டுவிட்டு பணி செய்திருந்து முடித்திருந்தவர்களும் அதற்கு முன்னால் ஓராண்டு காலம் பணி செய்து முடித்திருந்து 1—4—74குப் பின்னால் வேலை நீக்கம் செய்யப்பட்டவர்களும் தனியாக நடத்தப்படும் தேர்வில் கலந்து கொள்ளலாம். அவர்கள் தேர்வாணைக் கழகத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டு, வயது வரம்பு தளர்த்தப்பட வேண்டியிருந்தால் அதை தளர்த்திக் கொடுக்கவும் அரசு தயாராக இருக்கிறது. இந்தத் தனித் தேர்வு நடத்துவது

பற்றி தேர்வாணைக் கழகம் சில தெளிவுரைகளைக் கேட்டிருக்கிறது. அந்தத் தெளிவுரைகளை அரசு விரைவில் அனுப்ப இருக்கிறது. தேர்வும் விரைவில் நடைபெற இருக்கிறது.

[முற்பகல் 9-40].

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவரவர்களே, படித்து வேலையில்லாமல் இருக்கின்ற பட்டதாரிகள் பற்றித் தெரிந்து கொள்ளத் தனிக் கேள்வி போட வேண்டுமென்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். படித்துவிட்டு, 6, 7 ஆண்டுகளுக்கு மேலாக பலர் வேலையில்லாமல் இருக்கிறார்கள். இதற்கிடையே 10 (ஏ) (1) என்ற நிலையில் வேலை பார்ப்பவர்களுக்கும் வேலையினை இழந்து விடுகின்ற ஆபத்து இருக்கின்றது. ஆகவே இதற்குத் தனியாக சர்வீஸ் கமிஷன் மூலம் எடுப்பதற்கு பதிலாக சீனியாரிட்டி அடிப்படையிலே தேர்வு நடத்தி அந்த அடிப்படையிலே அவர்களுக்கு வேலை கொடுப்பதற்கு ஏதாவது ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, இப்போது 10 (ஏ) (1) விதியின் கீழ் வேலை செய்பவர்களுக்கு என்று ஒரு சிறப்பு தேர்வினை நடத்த வேண்டுமென்ற முயற்சியைப்பற்றி எடுத்துக் கூறி இருக்கிறேன். ஆனாலும் 10 (எ) (1) ஆசிரியர்களையும் நியமனம் செய்ய வேண்டிய நிலை நிர்வாகத்தினருக்கு இருக்கத்தான் செய்கிறது. சில வேளைகளில் இந்த மாதிரி தற்காலிக ஆசிரியர்களையும் நியமனம் செய்துதான் ஆக வேண்டி இருக்கிறது.

திரு. கே. பண்ணை சேதுராம்: பேரவைத் தலைவரவர்களே, இந்த 10 (எ) (1) என்ற நிலையில் பள்ளிகளில் ஆசிரியர்களை அமர்த்தும்போது சில தவறுகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆகவே, இந்தத் தவறுகளை நீக்குகின்ற வகையில் அரசே நியமனம் செய்வதற்கான உரிமையை எடுத்துக்கொள்ள அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அப்படி நியமனத்திலே தவறு நேர்ந்திருக்கிறது என்று சுட்டிக் காட்டப்படுமேயானால் அவைகளை நீக்குவதற்கு அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்லூரி ஆசிரியர்கள்.

*வினா எண். 28—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா : பள்ளிகளில் புதிய கல்வித் திட்டம் செயல்படுத்தப்படுவதன் விளைவாகக் கல்லூரி ஆசிரியர்கள் வேலை இழக்கும் நிலைமை ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுவது உண்மையா ?